*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in
*DOI: https://doi.org/10.63300/tm07042026.398.39*

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Issue DOI: https://doi.org/10.63300/tm07042026

# Cultural Signatures in the Hymns (Pasurams) of the Azhwars

**Dr. A. Nirmala*,**
Assistant Professor, Department of Tamil VLB Janakiammal College of Arts and Science Kovaipudur
*Correspondence: nirmalatamil27@gmail.com, Tel: +919585587070

**Article Info**
Received on 29-Mar-2026, Revised on 29-Mar-2026, Accepted on 30-Mar-2026, Published on 01-April-2026

## ABSTRACT

Culture is a vital concept for understanding the evolution of human society, encompassing knowledge, morality, lifestyles, and social relationships. Tamil culture is a rich system integrating language, literature, arts, and traditions, with hospitality and devotion as its core pillars. This study explores the various dimensions of culture as reflected in the hymns of the Azhwars. It specifically examines their deep linguistic devotion to the Tamil language, their contribution to musical traditions (Isai), and the documentation of ancient musical instruments like the Yaazh, Conch (Sangu), and Flute (Kuzhal) within their sacred verses. By analyzing these pasurams, the research highlights how the Azhwars bridged the divine with social and artistic traditions, ensuring the preservation of Tamil cultural identity through spiritual literature.

***KEYWORDS:*** *Azhwars, Pasurams, Tamil Culture, Linguistic Heritage, Bhakti Literature, Musicology (Isai), Musical Instruments, Yaazh, Vaishnavism, Cultural Registry.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).
Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07042026.398.39*

# ஆழ்வார் பாசுரங்களில் பண்பாட்டுப் பதிவுகள்

**முனைவர் ஆ.நிர்மலா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
வி.எல்.பி.ஜானகியம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவைப்புதூர்.

**ஆய்வுச்சுருக்கம்**

மனித சமூகம் உருவாகி வளர்ந்த விதத்தைப் புரிந்து கொள்ளும் போது பண்பாடு என்பது மிக முக்கியமான கருத்தாகும். பொதுவாக பண்பாடு மற்றும் நாகரிகம் ஒன்றாகக் கருதப்பட்டாலும், அவை தனித்தனி பொருள்களைக் கொண்டவை என்பதைக் கவனிக்க வேண்டும் மனிதனின் அறிவு, ஒழுக்கம், வாழ்வியல் முறைகள் மற்றும் சமூக உறவுகள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பே பண்பாடு ஆகும்.

தமிழர் பண்பாடு மொழி, இலக்கியம், கலை, சமயம், மரபுகள் போன்ற பல கூறுகளை உள்ளடக்கிய ஒரு செழுமையான அமைப்பாகும். விருந்தோம்பல், ஒழுக்கம், பக்தி, கலைநயம் போன்றவை தமிழர் பண்பாட்டின் அடிப்படை அம்சங்களாக விளங்குகின்றன. இத்தகைய பண்பாட்டின் பல்வேறு பரிமாணங்களை ஆய்வு செய்வது, மனித வாழ்வின் உயர்ந்த நிலையை அறிய உதவுகிறது.

இந்த ஆய்வு, பண்பாட்டின் பொருள், அதன் வளர்ச்சி, தமிழ் இலக்கியங்களிலும் ஆழ்வார்களின் பாசுரங்களிலும் வெளிப்படும் பண்பாட்டு கூறுகள் மற்றும் கலைப்பண்பாட்டின் முக்கியத்துவம் ஆகியவற்றை விளக்குவதற்காக அமைந்துள்ளது. இவ்வாய்வின் மூலம் தமிழ் பண்பாட்டின் ஆழமும், அதன் சமூகப் பயனும் தெளிவாக அறிய முடிகிறது.

**கலைச்சொற்கள்:** ஆழ்வார்கள், பாசுரங்கள், தமிழர் பண்பாடு, மொழிப்பாரம்பரியம், பக்தி இலக்கியம், இசைக்கலை, இசைக்கருவிகள், யாழ், வைணவம், பண்பாட்டுப் பதிவுகள்.

**முன்னுரை**

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் உருவான மனித இனமானது தொடக்கத்தில் காடுகளில் சுற்றி திரிந்து விலங்குகளைப் போல வாழ்ந்து வந்தனர், தனக்கே உரிய தனித்த அறிவுத்திறனையும், சிந்தனை வளத்தையும் பயன்படுத்தி வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக் கொண்டு தமது ஆற்றலின் மூலம் இன்றைக்கு அரிய செயல்களைச் செய்து பண்பாடும். நாகரிகமும் மிளிர்ந்த மனித சமூகமாகத் திகழ்கின்றது. மனிதனை விலங்குகளிலிருந்து இனம்பிரித்துக் காட்டும் கூறுகளில் பண்பாட்டிற்கென்று தனியிடம் உண்டு பண்பாடு என்பதை ஆங்கிலத்தில் ஊரடவரசந என்ற சொல்லால் குறிப்பிடுகின்றனர்.

சமைத்தல் என்னும் சொல்லுக்குப் பக்குவப்படுத்துதல் என்று பொருள்படும் உண்ணும் உணவுப்பொருள் எப்படி மனிதனின் உடலுக்குத் தக்கவாறு பக்குவப்படுத்தப்படுகிறதோ அதுபோலவே மனிதனின் மனதிற்கு ஏற்றவாறு நடத்தலையே பண்படுதல் என்கிறோம்.

**பண்பாடு சொற்பொருள் விளக்கம்**

பண்பாடு என்ற சொல் ஆழமான பரந்து விரிந்த பொருளை உடைய சொல்லாகும். பண்பு என்பது தனிமனிதப் பண்பையும், பண்பாடு என்பது சமூகத்தின் பண்பையும் குறிப்பதாகும்.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07042026.398.39*

பண்பாடு என்பது பக்குவம் பெற்ற ஒரு நிலையைக் குறிக்கும் சொல்லாகும்.

பண் என்ற சொல்லுக்குப் பொதுவாக இசை, உருவாக்குதல், செய்தல் முதலான பொருள்கள் அமைந்திருக்கக் காணுகிறோம்.

**பண்என்னாம் பாடார் இயைபின்றேல் கண்என்னாம்**

**கண்ணோட்டம் இல்லாத கண்.**[1]

இக்குறளில் பண் என்பதற்கு "இசைவு" என்ற பொருள் அமைந்திருக்கின்றது. இதன் மூலம் பண்படுதலை இசைவுபடுதல்" எனவும் கொள்ளலாம்

இலக்கியத்தில் பண்பாடு

பண்பாட்டின் பொருளை கூர்மையான நோக்கத்தோடு வாழ்க்கையின் செம்மைக்கும். செறிவுக்கும் பயன்படுத்தி உள்ளார் சங்ககாலத் தமிழர் முறையான பண்பாட்டைப் பின்பற்றி ஒழுகிய மாணிபு சங்ககால மாந்தர்க்கே உரியதாகும்.

**பாடறிந்து ஒழுகும் பண்பினோரே**[2]

என்ற புறநானூற்றுப் பாடல் முறையான ஒழுக்கம் அனைவருக்கும் சிறந்தது என்ற பொருளைத் தருகின்றது. மனித நாகரிகத்தின் உயர்ந்தப் பண்புகளை ஒட்டியே மனிதப் பண்பாட்டின் வளர்ச்சி நிலைகள் பரிணாமம் பெறுகின்றன. அப்பரிமாணமே பண்பாடாகும்.

**பண்பெனப்படுவது தன்கிளை அறிந்து ஒழுகுதல்**[3]

என்று கலித்தொகைப் பாடல் விளக்குகின்றது. பிறருக்காக வாழும் பண்புநலமே பண்பாடாகும். தன்னைப் பிறருக்காக ஒப்புவிக்கும் பண்பில் சிறந்தவர் வாழ்வதால்தான் உலகம் இன்றும் அழிக்க இயலாத இறைமைப் பண்புடன் சிறந்திருக்கின்றது. தனக்குக் கிடைக்கும் உணவு எளியதானாலும் அதனைப் பிறரோடு பகிர்ந்துண்ணும் இயல்பே இனிமையாகும். இந்திரர் அமிழ்தமாக இருந்தாலும் தானே தனியாக உண்ணும் இயல்பை மறந்தவர்கள், சங்கச் சான்றோர்கள் இதனைப் புறநானூறு வாயிலாக,

**உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்**
**அமிழ்தம் இயைவதாயினும் இனிது எனத்**
**தமியர் உண்டலும் இலரே**[4]

என்று எடுத்துரைக்கின்றனர். பண்டையத் தமிழ் மக்கள் வாழ்வாங்கு வாழ்ந்து சிறப்புடைய பெருமைக்குரியவர்கள் ஆவார். அந்நிறைவுடைய வாழ்வில் வாழ்ந்த மொழிக்கு வளம் சேர்க்கவும் வாழ்வியலுக்கு வழிகாட்டவும் இலக்கணம் கண்டு வைத்துள்ளார்கள். இப்பண்புடையவர்களால் மட்டுமே உலகம் நல்வழியில் இயங்கும் என்பதைத் திருவள்ளுவர்,

**பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்**

**மண்புக்கு மாய்வது மன்**[5]

எனக் குறள் வழி விளக்கியுள்ளார். இத்தகைய சிறப்பு வாய்ந்த பண்பாட்டை ஆழ்வார்களும் தங்களின் பாசுரங்களின் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.

**ஆழ்வார்களின் மொழிப் பண்பாடு**

தமிழ்நாட்டின் அறிவு வளர்ச்சிக்கும், உரிமை வேட்கைக்கும், நற்சிந்தனைக்கும் காரணமாக

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.398.39*

இருப்பது தமிழ் மொழியாகும். செவ்வியல் மொழியான தமிழைப் பற்றி பாடாத கவிஞர்கள் இல்லை எனலாம்.

**தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்**
**இங்கமரர் சிறப்புக் கண்டார்[6]**

எனக் மகாகவி பாரதியார் தமிழ்ப்பற்றையும், நாட்டுப்பற்றையும் தமிழகத்தில் உயிர்ப்புறச் செய்தார்.

தமிழ்ப்பற்று என்ற கருத்தமைப்பானது ஆழ்வார்தம் பாசுரங்களில் காணப்படுகின்ற ஒன்றாகும். ஆழ்வார்தம் பாசுரங்கள் பக்திச் சிறப்பினை உணர்த்துவதோடு அப்பக்தி உணர்வை வெளிப்படுத்த உதவும் தம் தாய்மொழியாம் தமிழ்மொழியினிடத்து கொண்டிருந்த பெரும் பற்றானது மொழிப்பண்பாட்டினை புலப்படுத்துவனவாக அமைந்துள்ளது. ஆழ்வார்கள் தம் பாசுரங்களில் பக்தியோடு, தமிழையும் வளர்த்த பாங்கானது புலப்படுகின்றது.

குலசேகராழ்வார் முக்திக்கு வழிகாட்டும் தம் பாசுரங்களில் தமிழின் உயர் தனிச் செம்மையான மொழிப் பண்பாட்டை பலவாறு பாராட்டுகிறார், தமிழின் சிறப்பினை ஆழ்வார்.

**நடைவிளங்கு தமிழ்மாலை** **(பெரு.திரு. 1:10)**

**சொல்லினின் தமிழ்மாலை** **(மேலது. 2:10)**

**பன்னிய நூல் தமிழ் வல்லார்** **(மேலது 4:10)**

**சொல்லிய இன்தமிழ் மாலை** **(மேலது 6:10)**

**சீரார்ந்த தமிழ்மாலை** **(மேலது 9:11)**

என்ற அடைகளைக் கொண்டு சுட்டிக் கூறுகின்றார். மேலும்,

**தாலேலோ என்றுரைத்த தமிழ்மாலை (மேலது 8:11)**

என்று தாலாட்டோடும் இறையுணர்வினை, தமிழ்ப்பண்பாட்டினை கண்ணனின் புகழ்பாடும் ஆழ்வார், விளக்குவனவாக அமைந்துள்ளன.

**அமரர்கள் தம் தலைவனை அந்தமிழின் இன்பப் பாவினை (பெரு.திரு.1:4)**

என்று கண்ணனை அழகிய தமிழ்மொழியின் இன்பப் பாவாகவே உருவகித்துப் பேசுகிறார். குலசேகராழ்வார் பாசுரங்களில் தமது தமிழ்க் காதலைப் பக்தியுடன் வெளிப்படுத்தி இருக்கின்றார் என்ற செய்தியினை அறிய முடிகின்றது.

ஆழ்வார்களின் பாசுரங்களுக்கு உரியவன் இறைவனே, மானீடர்கள் அல்ல என்ற நிலையில், நிலைத்து நின்று கவிதைக்கும், மொழிக்கும் தெய்வீகத்தன்மையை அளித்தவர்கள் ஆழ்வார்கள்.

**கவிதைக்குரிய நிறை பொருளை**
**நேர்பட்டேன் யான்** **(நாதி அ. 69)**

என்கிறார் திருமழிசையாழ்வாரின் பாசுரம் உணர்த்துகின்றது.

திருமங்கையாழ்வாரின் தொண்டினைக் கண்டு உள்ளம் மகிழ்ந்த திருவரங்கத்து

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07042026.398.39*

எம்பெருமான் ஆழ்வாரை நோக்கி உமக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்கின்றார். பெருமானைப் பணிந்து நின்ற திருமங்கை மன்னன் நம்மாழ்வாரின் திருவாய்மொழியை தங்கள் முன்னிலையில் இன்னிசையோடுப் பாடி அருள வேண்டும் என்று நிற்கின்றார் அவ்வாறே ஆகட்டும் என்று அன்று முதல் இன்று வரை திருமால் முன்னிலையில் செந்தமிழ்ப் பாசுரமானது ஒலித்துக் கொண்டிருக்கிறது இச்செய்தியினை,

**திருமால் திருக்கோயில்களில் விழாக்களின் போது**
**தமிழ்ப் பிரபந்தத்தை இறைவன் முன்னும் வடமொழி**
**வேதத்தை இறைவன் பின்னும் ஓதிச்செல்வதிலிருந்து**
**பிரபந்தங்களின் சிறப்பை அறியலாம்**[7]

என்ற கருத்தின் மூலம் தமிழின் முதன்மைச் சிறப்பை அறிய முடிகின்றது.

பூதத்தாழ்வாரே ஆரா அரமதாகிய இறைவனை அமுதத்தமிழில் போற்றி நிற்கின்றார் என்பதனை,

**அமுதென்றும் தேனென்றும் ஆழியான் என்றும்**
**அமுதன்று கொண்டுகந்தான் என்றும்**
**அமுதன்ன சொல்மாலை ஏத்தித் தொழுதேன் (இ.தி.அ - 85)**

என்ற பாசுரப் பார்களின் வாயிலாக அறிய முடிகின்றது. இங்ஙனம் தமிழால் உகந்து பாடப்பாட இறைவனும் அவர்களுக்கு தமிழாகலே தோன்றினான் இதனால் இறைவன் தமிழினும் வேறானவன் என்ற எண்னணம் விலக அவயே தமிழ், தமிழே அவன் என்ற உணர்வே ஓங்கி வளர்ந்த உண்மையானது தெளியாது. மேலும்,

**ஞானத்தமிழ் புரிந்தவன் (இ.தி.அ - 1)**

என்றும்.

**இருந்தமிழ் நல்மாலை இணை-அடிக்கே சொன்னேன்**
**பெருத்தமிழன் அல்லேன் (இ.தி.அ -74)**

என்று தன்னை தமிழுக்கு அறிமுகமாக்கிக் கொண்டு சிறந்தவர் என்பதை உணரமுடிகின்றது. தமிழ் என்ற சொல்லின் பெருமையை நம்மாழ்வாரும், திருங்கையாழ்வாரும்,

**உண்டும் உமிழ்ந்தும் கடந்தும் இடந்தும் கிடந்தும் நின்றும்**
**கொண்ட கோலத்தோடு வீற்றிருந்தும் மணம் கூடியும்**
**கண்ட ஆற்றால் தனதே உலகுஎன நின்றான் தன்னை**
**வண்தமிழ் நூற்க நோற்றேன் அடியார்க்கு இன்பமாரியே**

**திரு.வா.மொ. பா.எ. 4:5:10**

என்றும்.

**சங்கமுகத் தமிழ்மாலை பத்தும் வல்லார் பெரி.திரு.மொ. பா.எ. 3:4:10**

ஆகியப் பாகரங்களிலிருந்து தமிழின் இனிமைத் என்றும் திருவாய்மொழி, பெரிய திருமொழி தன்மையை உணர முடிகின்றது. இக்கருத்தையே ஆண்டாளும்

**சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே**

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.398.39*

**இங்கு இப்பரிசு உரைப்பார் ஈரிரண்டுமால் வரைத்தோள் திருப்பாவை -பா.30**

என்ற பாசுர அடிகளின் வழி சங்கத்தமிழின் மேன்மையினைப் பறைசாற்றுகின்றார்.

**தமிழும் திருமாலும்**

வைணவத் திருக்கோயில்களில் வீதி உலாவின் போது ஆண்டவன் திருவுருவம் முன்பு நாலாயிர திவ்வியப் பிரபந்தம் முதலில் பாடப்படும். அத்திருவுருவத்திற்குப் பின்பே வேதமானது ஒலிக்கும்.

**பழமறைக்கண் முறையிடப் பைந்தமிழ் பின்சென்ற**
**பச்சைப் பசுங்கொண்டலே**[8]

என்று குமரகுருபரர் கூறியிருப்பதை ஈரத்தமிழின் சான்றாகக் கொள்ளமுடிகின்றது. இதனை,

**ஆடவரத்**
**தாழ்பாய லானரைநீ தானே தொடர்ந்தாளோ**
**சூழ்பபாயோ டுன்னைத் தொடர்ந்தாரோ தமிழ்விடு தூது வரி – 92-93**

என்ற அடிகள் திருவெஃகாவில் கோவில் கொண்டுள்ள திருமால் பாயோடு தமிழைத் தொடர்ந்தார் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது. இதனை,

**கணிக்கண்ணன் போகின்றான் காமரும் பூங்கச்சி**
**மணிவண்ணா நீக்கிடக்க வேண்டா - துணிவுடைய**
**செந்தாப் புலவன்யான் செல்கின்றேன் நீயும்உன்றன்**
**பைந்நாகப் பாய்ச்சுருட்டிக் கொள்**[9]

என்று திருமழிசையாழ்வாரின் பாடலைக் கேட்டு திருமால் தம்முடைய பாயைச் சுருட்டிக் கொண்டு பின்சென்றார் என்பதின் மூலம் ஆழ்வார்கள் பாடிய மொழிக்கலப்பில்லாத தூய தமிழைக் கேட்ட இறைவன் தன்னையும் மறந்த நிலையில் தமிழுக்கு அடிமைப்பட்டு பின்சென்றார் என்ற செய்தியானது புலப்படுகின்றது.

தொண்டரடிப் பொடியாழ்வாரை தமிழ்த்தொண்டர் என்று கூறுவர். திருமாலை திருப்பள்ளியெழுச்சி என்ற இரு பகுதிகளை சங்கத்தமிழ் மரபினைப் பின்பற்றி அமைத்தார். பள்ளியெழுச்சி என்ற இலக்கிய மரபினை ஓட்டி துயிலெழுப்புவதாக அமைக்கப்பட்டது. சங்க காலத்தில் மன்னர்களைக் காலையில் துயிலெழுப்பும் முகமாகப் பாடப்பட்ட பாடல்கள் அனைத்தும் பாணர்கள் யாழ்கொண்டு இசைத்துப் பாடுவனவாக காணப்படுகின்றன.

**தாவில் நல்லிசை கருதிய கிடந்தோருக்கு**
**சூதர் ஏந்திய துயிலெடை நிலையும்**[10]

என்று தொல்காப்பியம் கூறுவதாலும் ஐயனாரிதனார்

**அடுதிறல் மன்னரை அருளிய எழுகெனத்**
**தொடுகழல் மன்னனைத் துயிலெழுப்பின்று**[11]

என்று கூறுவதாலும் பக்தி இலக்கியக் காலத்தில் சமுதாயத்தில் நிலவி வந்த இப்பண்பட்ட வழக்கமானது இறைவனைத் துயிலெழுப்புவதாக அமைந்திருக்கிறது என்பதையும், மன்னர்களை பள்ளியறை செல்லுங்காலையும், எழும்போதும் புலவர் பள்ளியெழுச்சி பாடினர் என்ற மரபின்

அடிப்படையில் இறைவனுக்குரிய வகையில் பக்திக்காலத்தில்; புதிய மாற்றம் செய்து கொண்டு திருப்பள்ளியெழுச்சியைத் தொண்டரடிப்பொடியாழ்வார் படைத்தார். இதனால்தான் தமிழகத்தில் இன்றும் பல கோயில்களில் இறைவன். துயில்கொள்ளச் செல்லும்போதும் துயிலிலிருந்து எழும்போதும் பள்ளியெழுச்சிப் பாடிப் பரவும் நிலை தொடர்வதைக் காணலாம். மன்னரைப் பாடிய மரபை மாற்றி இறைவனைப் பாடுகின்ற உயர்நிலையானது மாற்றம் பெறச் செய்த தொண்டரடிப்பொடியாழ்வார் தாம் தமிழ்த்தொண்டர் என்று போற்றுதற்குரியவராகின்றார்.

இத்தகையப் பெருமை வாய்ந்த தமிழ்மொழியை ஆழ்வார்கள் செந்தமிழ், பைந்தமிழ், ஒண்டமிழ், ஈரத்தமிழ் என்றெல்லாம் கூறுவதைப் போன்று 'பாலேய் தமிழ்' பால் போன்று நிறைந்து மணம் பரப்பும் தமிழ் என்று ஆழ்வார்களின் பாசுரங்களில் தமிழ் மணந்து இனிப்பதால் ஆழ்வார்களின் தமிழைப் பாலைத் தமிழ் என்று போற்றிக் கூறியுள்ளனர். இவ்விதம் ஆழ்வார்தம் பாசுரங்களில் தெய்வீகச் சுவையேற்றித் தெய்வத்தையே நெகிழ வைத்த தெய்வத்தமிழ் என்ற தனித்தன்மையானது தமிழுக்கே உரியதாகும்.

**கலைப் பண்பாடு**

கலைகள் என்பவை உணர்ச்சியின் வெளிப்பாடு, ஒரு பண்பாட்டின் அடையாளம் என்றும் கூறலாம். இக்கலைகள் நீண்ட நெடிய பாரம்பரியத்திற்கு உரியவையாதலால் பழம்பெரும் பண்பாட்டினை அறிந்து கொள்வதற்கு துணைநிற்கின்றன எனலாம்.

தமிழர் வளர்த்த இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழில் இசைக்கலையும் ஒன்றாகும். அழகுக் கலைகளில் ஒன்று இசைக்கலை ஆகும். இசையின் மூலம் இதயத்தின் மிக ஆழமான உணர்வுகளை நேரடியாகவும், உடனடியாகவும் உணர்த்தும் வாயில் ஆகும். இசை என்னும் சொல்லிற்கு இசைவிப்பது. வசப்படுத்துவது எனப் பொருள் கொள்ளலாம் என்பார் சு. வித்யானந்தன்.[12]

இசையானது உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடியதாக விளங்குவதுடன் சிறந்த மக்கள் தொடர்பு சாதனமாகவும் விளங்குகின்றது. குழந்தைப் பிறப்பிலிருந்து சமயச் சடங்கு ஈறாகப் பல பண்பாட்டு நிலைகளிலும் இசையானது இடம்பெற்றுள்ளது. பண்டையத் தமிழகத்தில் நிலப்பாகுபாடு என்பது குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் எனும் பிரிவின் கீழ் அடங்கியிருந்தது. ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய மக்களின் பழக்கவழக்கங்கள், உணவு வகைகள், தொழில்கள் அனைத்தும் பண்பாட்டின் அடிப்படையில் வேறுபட்டிருந்தன. பண்பாட்டினையும் நிலத்தையும் அடிப்படையாகக் கொண்டு பண்கள் மற்றும் இசைக்கருவிகள் எழுந்தன. ஐந்திணைக்கு இலக்கணம் கூற முற்பட்ட தொல்காப்பியரும் கருப்பொருட்கள் இவையிவை எனக் கூறுமிடத்து.

**தெய்வம் உணாவே மாமரம் புட்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகை**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப**[13]

என்பார். முத்தமிழில் ஒன்றான இசைத்தமிழில் இலக்கணங்கள் இலக்கியங்கள் மிகுந்திருந்தன. இவ்விலக்கியங்கள் தமிழர் பண்பாட்டோடு இசை தன்னை இணைத்துக் கொண்ட முறையைக் குறித்தும், அதன் தொன்மை மற்றும் பெருமை குறித்தும் பறைசாற்றியுள்ளன.

இசையானது காதினால் கேட்டு இன்புறத்தக்க இனிமை மிகுந்த கலையாகும். இது தமிழர் வளர்த்த கலைகளில் மிகப் பழமையானதும், பண்பாடுடையதும் ஆகும். இது மனித உணர்வோடு இரண்டறக் கலந்த ஒன்றாகும். எக்காலத்திற்கும் அழிவின்றி கால மாறுதலுக்கேற்ப புதிய உத்திகளைக் கொண்டு நவீனமயமாகி வருவதே பண்பாட்டு அடையாளமான இசைக்கலையாகும். ஆழ்வார்களில் பலர் இசையோடு பல பாடல்களைப் பாடிக் கோயில்தோறும் சென்று இறைவனை வழிபட்டனர்.

**குருகூர் நம்பி**
**பாவின் இள்னிசை பாடித் திரிவனே (க.நு.சி - 2)**

என்ற மதுரகவிகளின் பாசுரப் பகுதியும்

**பண்ணார் பாடல் இன்கவிகள்**
**யானாய்த் தன்னைத் தான்பாடி**
**தென்னா என்னும் என் அம்மான்**
**திருமாலிருஞ்சோ லையானே திரு.வா.மொ. 10.6.5**

என்ற நம்மாழ்வாரின் வாக்கும் ஆழ்வார்கள் இறைவனை இசையோடுப் பாடி வழிபட்டனர் என்பதை அறிய முடிகின்றது. மேலும் பேயாழ்வாரும்,

**பொப்பிடைக் கொன்றை நின் முறியாழியும் காசும் கொண்டு**
**இருங்களிற்றீட்டமும் புடியோடு முரசும்**
**வேய்ங்குழலோசையும் விடை மணிக்குரலும்**
**யாழ்குழல் முழவமோடு இசைதிசைகெழுமி திரு.வா.மொ. 10.6.5**

என்ற பாசுரத்தின் வழி இசையின் பெருமையைக் கூறுவதின் மூலம் உணரமுடிகிறது.
நம்மாழ்வார் தமது பாசுரத்தில்

**பண்ணார்தமிழ் பண் தலையில் சொன்னதமிழ் திரு.வா.மொ. 10.6.5**

என்றும்.

**பண்கள் தலை கொள்ளப் பாடி திரு.வா.மொ. 10.6.5**

என்றும் கூறுகின்றார்.

பண்ணின் பெருமையானது வெளிப்பட தாம் இயற்றியப் பாசுரங்களை இசைத்துப் பாடியவர்கள் ஆழ்வார்கள். தம் பாட்டினால் படித்தோரிலிருந்து பாமரர் வரை மகிழ்வோடு இருக்கச் செய்தவர்கள். அவர்கள் ஆண்டவனை இசைப்பாட்டால் புகழ்பாட்டால் மகிழ்வித்து தன்னை ஆட்கொள்ளச் செய்தவர்கள் ஆழ்வார்கள் ஆவார்கள்.

**இசைக்கருவிகள்**

ஆழ்வார்கள் இனிய தமிழ்மொழியில் பல்வேறு பாசுரங்களை இறைவனுக்கு சூட்டப்படும் பாமாலையாக அளித்துள்ளனர். இறைவனுக்கு இசைபட இயற்றிய செய்யுள் வகைகளில் இசைக்குறிப்புகள் பல உள்ளன. அவற்றுள் பல்வேறு இசைக்கருவிகள் பற்றிய செய்திகளும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

தொண்டரடிப்பொடியாழ்வார் யாழ், குழல், தண்ணுமை, முழவம் போன்ற கருவிகளை தமதுத் திருப்பள்ளியெழுச்சிப் பாசுரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**ஏதமில் தண்ணுமை எக்கம் மத்தளி**
**யாழ்குழல் முழவமோ டிசைதிசை செழுமிக்**
**கீதங்கள் பாடினர்** **(திருப்பள்ளியெழுச்சி-9)**

என்ற பாகரத்தின் மூலம் இசைக்கருவிகள் பற்றிய குறிப்புகளும் உள்ளன.

நாம்புக் கருவியும் துளைக்கருவிகளும் பண்ணிசைக்கு ஏற்ற வகையாகக் கருதப்படுகின்றன. நரம்பின் அதிர்வு, முறுக்கம் முதலியவைகளை முறையாக வைத்து மீட்டி இசையானது எழுப்பப்படுகிறது துளைக்கருவிகளில் காற்றை அளவாக இசைக்கேற்றவாறு முறையாக செலுத்தி இசையானது எழுப்பப்படுகிறது.

பண்ணிசைக் கருவிகளில் குறிப்பாக நரம்பிசைக்கருவிகளில் யாழும், துளைக்கருவிகளில் குழல், சங்கு ஆகியவையும் சிறப்பாக இடம்பெற்றிருக்கின்றன.

**யாழ்**

சங்க காலத்தில் இருந்தே யாழுக்கு இசையுலகில் ஒரு சிறப்பான இடமுண்டு. நரம்புக கருவிகளில் சிறப்பானதொரு நிலை யாழுக்கு இருந்ததை சங்கப் பாக்களின் வழியாக நாம் அறியலாம்.

**உப்புணர் யாழும் இசையும், [14]**

என்ற பாடலடியில் யாழினைப் பற்றிய செய்தியானது இடம்பெற்றிருக்கிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த யாழினைப் பற்றி குலசேகராழ்வார்.

**இணையில்லா இன்னிசை யாழ் (பெரு திரு, 1:5)**

என்ற பாசுரத்தில் யாழில் இசையினை இனிமையானது என்று ஆழ்வார் குறிப்பிடுகின்றார்.

**சங்கு**

சங்கு ஒரு இயற்கையான இசைக்கருவி, பண்டைக் காலத்தில் இருந்தே சங்கு ஒரு மங்கலமான கருவியாகக் கருதப்படுகிறது. ஆலயங்களிலும் வழிபாட்டிற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. சங்குகளில் வலம்புரியானது மிகச் சிறந்ததாகும். பாசுரங்களில் சங்கு என்ற பொருளில் வலம்புரி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. திருமழிசையாழ்வார்.

**சங்கு தங்கு முன்னை நங்கை கொங்கை தங்கலுற்றவன் (திருச்சந்: 57)**

என்ற திருச்சந்த விருத்தத்தில் சங்கு பற்றிய குறிப்பினைக் கூறியுள்ளார். பொய்கையாரும்,

**மயங்க வலம்புரி வாய்வைத்து (மு.தி.அ.)**

என்றும்,

**வெண்சங்கம் ஊதிய வாய் (மு.தி.அ. 37)**

என்றும் சங்கு ஊதிய சிறப்பினை எடுத்துரைக்கின்றார்.

**குழல்**

மனிதன் ஊது கருவியாகிய குழலினை மூங்கிலில் ஓரிரு துளைகளை இட்டு ஊதினான். இதில் ஓரிரு சுரங்களை மட்டும் தொடக்கத்தில் வாசிக்க முடிந்தது. பின் துளைகளை அதிகப்படுத்தி சுரங்களை அதிகப்படுத்தி வாசிக்கத் தொடங்கினான். பின்பு படிப்படியாக வளர்ந்து ஏழு சுரங்களை வாசித்தான். துளைகளைப் பாதி மூடி ஊதியும், பாதி திறந்து ஊதியும் பல்வேறு கானங்களையும்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.398.39*

வெளிப்படுத்தியுள்ளனர்.

ஊது கருவிகள் முறையில் முதலில் தோன்றியது சங்காகும். அதைத் தொடர்ந்து குழல் தோற்றம் பெற்றது. குழலும் யாழும் இணைந்துப் பல்வேறு இன்னிசைகள் தோன்ற இசை வளர்ச்சி பெற்றது. சங்க இலக்கியங்களில் குழல் பற்றியக் குறிப்புகள் காணப்படுகின்றன.

**இருதிறம் கண்ணார் குழலின் கரைபு எழ**[15]

என்ற பாடல் அடியில் 'கண்ணார் குழல்' என்று கூறியிருப்பதனால் கணுக்களுடைய மூங்கில் குழல் என்று இதனைக் கருத முடிகின்றது.

ஆழ்வார்களால் குழல் என்ற இசைக்கருவியின் பெயர் கண்ணனுடன் தொடர்புபடுத்திப் பாசுர வரியில் எடுத்தாளப்பட்டுள்ளது.

**மேட்டிள மேதிகள் தளைவிடும் ஆயர்கள்**
**வேங்குழ லோசையும் விடைமணிக் குரலும் (திருப்பள்ளியெழுச்சி. 4)**

என்று தொண்டரடிப் பொடியாழ்வார் மூங்கிலால் ஆனக் குழலைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். குலசேகராழ்வார்

**குழைந்து குழலினை ஊதிவந்தாய்**
**எங்களுக்கே யொரு நாள் வந்தூத**
**உள்குழ லின்னிசை போதராதே (பெரு. திரு 6:9)**

என்றும், திருமங்கையாழ்வார்,

**ஆயன் வாய்**
**ஏங்கு வேய்ங்குழல் என்னோடாடும்**

என்றும் நம்மாழ்வார்,

**குழலென்ன யாழுமென்னக் குளிர்சோலையின் தேனருந்து**
**மழலை வரிவண்டுகள் இசைபாடும் திருவல்ல வாழ் திரு.வா.மொ. 2620**

என்றும் குழலினிசையைப் பலவாறு குறிப்பிட்டிருக்கின்றனர்.

கண்ணனோடு 'குழல்' எப்போதும் இருப்பதால் ஆழ்வார்கள் பலரும் குறிப்பிடுகின்றனர்.

**கலைகள்**

ஆழ்வார்கள் காலமான பக்தி இலக்கியக் காலத்தில் பல கலைகள் தோன்றின. தனிப்பட்ட ஒரு பகுதியின் மன்னராகச் செயல்பட்ட குலசேகராழ்வார் தம்முடைய பெருமாள் திருமொழியில்

**கலைவலவர் தாம்வாழும் (பெரு.திரு 8.8)**

என்று குறிப்பிட்டிருப்பதன் மூலம் பல கலை வல்லுநர்கள் அவருடைய காலத்தில் இருந்ததைச் சுட்டிக்காட்டுகின்றார்.

பொய்கையாழ்வாரும், பேயாழ்வாரும் தமிழ் இலக்கியங்களில் குறிப்பிட்டுள்ளதைப் போன்றே

**குரவை குடம். எனக் (மு.தி.அ. 2135)**

குறிப்பிட்டுள்ளதால் கூத்து என்பது மக்களின் வாழ்க்கையோடு இயைந்த ஒரு பண்பாக சமய இலக்கியங்களும் அறிவிக்கின்றன எனலாம்.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.398.39*

கிருஷ்ணனைக் 'குடமாடி' என்றும், திருமாலைக் 'குடமாடு கூத்தன்' என்றும் தன்னுடைய நாச்சியார் திருமொழியில் வர்ணிக்கும் ஆண்டாளின் கலையுணர்வானது புலப்படுகின்றது.

**தொகுப்புரை**

- பண்பாடு என்பது ஒரு தனிப்பட்ட இயல்பு அல்ல. பல்வேறு கூறுகளின் ஒன்றுபட்ட தன்மையே பண்பாடு ஆகும்.
- சமுதாயத்தில் நிலவுகின்ற வழக்கங்கள், மதிப்புகள், ஒழுக்கங்கள் முதலியவற்றைப் பண்பாட்டின் கூறுகள் எனலாம்.
- ஆழ்வார்கள் தமிழின் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர்கள் என்பதை அவர்களின் பாசுரங்களின் வழி மொழிப் பண்பாட்டை உணர்ந்து கொள்ள முடிகிறது.
- ஆழ்வார்கள் இசையின் மீது கொண்டிருந்த பற்று, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில் இசையோடு கலந்த பாசுரங்களை மக்களிடத்தில் வெளிப்படுத்தியுள்ளனர்.

**அடிக்குறிப்புகள்**

[1]. குறள் – 573

[2]. புறம் – 197

[3]. கலித் – 133

[4]. புறம் - 182

[5]. குறள் - 996

**[6]. பாரதியார் கவிதைகள் - பக்.158**

[7]. வைணவ மரபும் மெய்ப்பொருளியலும் பக்.40

[8]. விமலானந்தன், மது.ச.தமிழ் இலக்கிய வரலாறு, பக்.107

[9]. பாக்யமேரி;, தமிழ் இலக்கிய வரலாறு, பக்.335

**[10]. தொல்.பொருள். நூ.88**

**[11]. புறப்பொருள் வெண்பாமாலை நூ.197**

[12]. சு. வித்யானந்தன்.சு தமிழர் சால்பு பக்.310

[13]. தொல்.பொருள்.அகத்திணையியல் நூ.20

**[14]. பரி.7 வரி.78**

[15]. **பரி.17 வரி.11**